# நிலவின் சுற்றுப் பாதையில் சந்திரயான் – 3 விண்கலம்



**சென்னை, ஆக. 5:** நிலவை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட சந்திரயான் – 3 விண்கலம் நிலவின் சுற்று வட்டப் பாதைக்குள் நுழைந்துள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை ரூ. 615 கோடியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம் -3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜூலை 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. தற்போது, பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தை இயக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சந்திரயானை நிலவுக்கு அருகே கொண்டு செல்லும் விதமாக அதன் புவி நீள்வட்ட சுற்றுப்பாதைத் தொலைவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

தொடர்ந்து, ஆகஸ்ட் 1-ஆம் தேதி சந்திரயான் புவி ஈர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும்படி அதன் பயணம் மாற்றியமைக்கப்பட்டது. 5 நாள்கள் பயணத்துக்குப் பிறகு நிலவுக்கு அருகே விண்கலம் சனிக்கிழமை சென்றது. இதையடுத்து விண்கலம் நிலவின் வட்ட சுற்றுப் பாதைக்குள் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு விவரம்:

சந்திரயான் - 3 விண்கலத்தில் உள்ள இயந்திரம் இயக்கப்பட்டு, அது நிலவின் வட்ட சுற்றுப் பாதைக்குள் உந்தித் தள்ளப்பட்டது.

தொடர்ந்து, நிலவின் ஈர்ப்பு விசையை உணர்வதாக விண்கலம் இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்துக்கு தகவல் அனுப்பியது. அடுத்தகட்டமாக நிலவின் சுற்றுப்பாதை தொலைவு ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் குறைக்கப்பட உள்ளது. தொடர்ந்து, சுற்றுப்பாதையின் தொலைவை படிப்படியாகக் குறைத்து ஆகஸ்ட் 23-ஆம் தேதி விண்கலம் நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி செயல்பட்டால் ஆகஸ்ட் 23-ஆம் தேதி மாலை 5.47 மணிக்கு சந்திரயான் 3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## காலமானார்

### முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என்.விட்டல்

**சென்னை, ஆக. 5:** முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என். விட்டல் (85) சென்னையில் வியாழக்கிழமை (ஆக. 3) காலமானார்.



சென்னையில் கல்வி பயின்ற என்.விட்டல் அரசுப் பணியில் இணைந்த பிறகு, பல முக்கியப் பொறுப்புகளை வகித்தார். குறிப்பாக மத்திய தொலைத் தொடர்புத் துறைச் செயலராக இவர் பதவி வகித்த (1990–1996) காலகட்டத்தில் உள்நாட்டிலேயே மென்பொருள் உருவாக்கம், மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கும் கொள்கை வகுக்கப்பட்டு வளர்ச்சி கண்டன. இந்திய ஐடி. துறைக்கு வித்திட்டது அந்தக் காலகட்டத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், தொலைத்தொடர்பு ஆணையம் உருவாக்கப்பட்டு தேசிய தொலைத் தொடர்பு திட்டம்-1994 அறிவிக்கப்பட்டதில் இவருக்கு முக்கியப் பங்குண்டு.

அதையடுத்து, தலைமை கண்காணிப்பு ஆணையத்தின் தலைவராகப் பதவி வகித்தார்.

தனது நாற்பதாண்டு அரசுப் பணி அனுபவம் காரணமாக ஊழலின் தீமை குறித்து ஆழமாக அறிந்திருந்த அவர், 'நாட்டின் வளர்ச்சிக்கு ஊழல் தடையாக உள்ளது என்றும், ஊழல் என்பது தேசத்துக்கு எதிரானது, ஏழைகளுக்கு எதிரானது, பொருளாதாரத்துக்கு எதிரானது' என்றும் குறிப்பிட்டார்.

### நவீன உள்கட்டமைப்பு திட்டமிடல்

# ‘உத்வேகம்’ திட்ட அணுகுமுறையை கையாள அதிகாரிகளுக்கு பரிந்துரை

**புது தில்லி, ஆக. 5:** நவீன உள்கட்டமைப்பு திட்டமிடலில், பிரதமரின் 'உத்வேகம்' (கதி சக்தி) செயல்திட்ட அணுகுமுறையை கையாள மாநில உயரதிகாரிகளுக்கு மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

பிரதமரின் 'உத்வேகம்' செயல் திட்டத்தின் அணுகுமுறை மற்றும் பயன்பாடு குறித்த இணையவழி கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மத்திய தொழில் மற்றும் உள்நாட்டுவர்த்தகஊக்குவிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், மத்திய பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட உயரதிகாரிகள், மாநில நிர்வாக பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 34 உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அப்போது பேசிய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறை செயலர் ராஜேஷ் குமார் சிங், 'இந்தியாவில் உலகத் தரத்திலான உள்கட்டமைப்பை உருவாக்குவதில், பிரதமரின் 'உத்வேகம்' செயல்திட்டத்தின் பயன்பாடு மற்றும் கருத்துருவை மாநில உயரதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் நிலவுகிறது. இத்திட்டத்தின் அணுகுமுறையானது, நேரம் மற்றும்செலவைபெருமளவில்மிச்சப்படுத்தக் கூடியதாகும். எனவே, மாவட்டங்களில் நவீன உள்கட்டமைப்புக்கான திட்டமிடலில், 'உத்வேகம்' திட்ட அணுகுமுறையை கையாள வேண்டும்' என்றார்.

பன்முக ஒருங்கிணைப்புக்கான தேசிய பெரும் செயல்திட்டமான 'உத்வேகம்' (கதி சக்தி), நாடு முழுவதும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் அமலாக்கத்தைஉறுதிசெய்யும் எண்ம தளம் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக சாம்பியன்கள் அதிதி, ஓஜாஸ்





**பெர்லின், ஆக. 5:** உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் காம்பவுண்ட் பிரிவில் தங்கம் வென்றார் 17 வயதே ஆன இந்தியாவின் அதிதி சுவாமி.

அதே போல் ஆடவர் காம்பவுண்ட் பிரிவில் தனிநபர் தங்கம் வென்றார் ஓஜாஸ் பிரவீன் டியோடேல்.

ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் மகளிர் தனிநபர் காம்பவுண்ட் பிரிவில் 149-147 என்ற புள்ளிக் கணக்கில் மெக்ஸிகோவின் ஆன்ட்ரியா பெக்காராவை வீழ்த்தி தங்கத்துடன் புதிய உலக சாம்பியன் ஆனார் அதிதி.

கடந்த ஜூலை மாதம் யூத் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்றிருந்த அதிதி சீனியர் உலக சாம்பியன் ஆகி வரலாறு படைத்தார்.

மெக்ஸிகோ வீராங்கனை ஆன்ட்ரியா நடப்பு சாம்பியன் சாரோ லோபஸை வீழ்த்தி இருந்தார். முதல் சுற்றிலேயே 30-29 என அதிதி முன்னிலை பெற்றார். முன்னதாக அரையிறுதியில் தனது முன்னோடியான சுரேகாவை 149-145 என வென்றிருந்தார் அதிதி.

வில்வித்தை வரலாற்றிலேயே 17 வயதில் தங்கம் வென்றவர் என்ற சிறப்பையும் பெற்றார் அதிதி. மற்றொரு இந்திய வீராங்கனை ஜோதி வென்னாம் சுரேகா 150/150 என்ற புள்ளிக்கணக்கில் இபெக் டோம்ருக்கை வீழ்த்தி வெண்கலம் வென்றார். மகளிர் அணிகள் காம்பவுண்ட் பிரிவில் சுரேகா, அதிதி, பர்னீத் கௌர் அடங்கிய இந்திய அணி ஏற்கெனவே தங்கம் வென்றிருந்தது.

**ஓஜாஸ் பிரவீன் சாம்பியன்:** ஆடவர் காம்பவுண்ட் பிரிவில் 150-149 என்ற புள்ளிக் கணக்கில் போலந்தின் பிஸிபில்ஸ்கையை வீழ்த்தி தங்கம் வென்றார். இதன் மூலம் உலக வில்வித்தை தனிநபர் பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சிறப்பை பெற்றார் ஓஜாஸ்.

3 தங்கம், ஒரு வெண்கலத்தை வென்றது இந்தியா. இதுகுறித்து இந்திய வில்வித்தை சங்க பொதுச் செயலர் பிரமோத்சந்துர்கர் கூறுகையில்: ஆசியப்போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், உலக சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி திறம்பட செயலாற்றியுள்ளது. ஆசியப்போட்டியிலும் 4 பதக்கங்களை எதிர்பார்க்கிறோம் என்றார்.

# மகளிர் 20 கி.மீ. நடைஓட்டம்: இந்தியாவுக்கு வெண்கலம்

**செங்டு, ஆக. 5:** உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் 20 கி.மீ. நடை ஓட்டத்தில் இந்திய அணி வெண்கலம் வென்றது.



சீனாவின் செங்டு நகரில் உலகப் பல் கலை. விளையாட்டுப் போட்டிகள் நடை பெற்று வருகின்றன. சனிக்கிழமை

மகளிர் 20 கி.மீ நடை ஓட்டத்தில் இந்திய அணி வெண்கலம் வென்றது. பூஜா குமாவத், நிகிதா லம்பா, மான்ஸி நேகி, பிரியங்கா ஆகியோர் அடங்கிய இந்திய அணி 5:12:13 நேரத்தில் கடந்து வெண்கலம் வென்றது. சீனா, ஸ்லோவோக்கியா தங்கம், வெள்ளி வென்றன.

தடகளத்தில் ஏற்கெனவே ஜோதி, பவான யாதவ், அமலன் போரோகைன் வெண்கலம் வென்றிருந்தனர்.

EVA STALIN IAS ACADEMY

# கலாசாரத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பழங்குடியினர்

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு



நீலகிரி மாவட்டம் முதுமலை தெப்பக்காட்டில் உள்ள வளர்ப்பு யானைகள் முகாமில் சனிக்கிழமை, யானைக்கு கரும்பு வழங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

**கூடலூர், ஆக. 5:** இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பழங்குடி இனத்தவர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

ஆஸ்கர் விருதுபெற்ற 'தி எலிஃபண்ட் விஸ்பெரர்ஸ்' என்ற ஆவணக் குறும்படத்தில் இடம்பெற்றிருந்த, முதுமலை பழங்குடி இனத்தைச் சேர்ந்த பொம்மன் - பெள்ளி தம்பதியை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தில்லியில் அண்மையில் சந்தித்துப் பேசினார்.

அப்போது, முதுமலை தெப்பக்காட்டில் உள்ள வளர்ப்பு யானைகள் முகாமுக்கு நேரில் வருவதாக அவர் உறுதி அளித்திருந்தார்.

அதன்படி, புது தில்லியில் இருந்து விமானம் மூலம் கர்நாடக மாநிலம், மைசூருக்கு சனிக்கிழமை பிற்பகல் வந்த குடியரசுத் தலைவர், அங்கிருந்து ராணுவ ஹெலிகாப்டரில் நீலகிரி மாவட்டம், மசினகுடிக்கு வந்தார். ஹெலிகாப்டர் இறங்குதளத்தில் அவரை தமிழக வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமசந்திரன், வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹு, மாவட்ட ஆட்சியர் சா.ப. அம்ரித், மேற்கு மண்டல ஐ.ஜி. சுதாகர் ஆகியோர் வரவேற்றனர்.

அங்கிருந்து காரில் தெப்பக்காட்டில் உள்ள யானைகள் முகாமுக்கு வந்த அவர், முகாமில் பராமரிக்கப்படும் யானைகளையும், அவற்றுக்கு உணவு தயாரிக்கும் கூடத்தையும் பார்வையிட்டார். பின்னர், ஆவணக் குறும்படத்தில் இடம்பெற்ற யானைக்கு கரும்பு வழங்கி மகிழ்ந்தார்.

**பாகன்களுடன் கலந்துரையாடல்:** இதையடுத்து, டாப்சிலிப் கோழிக்கமுத்தி, முதுமலை தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாம்களைச் சேர்ந்த பாகன்கள் 38 பேரிடம் கலந்துரையாடினார். தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமைச் சேர்ந்த தேவராஜ், விக்ரம், கிருமாறன், சுரேஷ் ஆகிய 4 பாகன்களும் தங்களின் அன்றாடப் பணிகள் குறித்து அவரிடம் விளக்கினர். இவர்கள் பேசியதை முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் வித்யா, குடியரசுத் தலைவருக்கு மொழிபெயர்த்துக் கூறினார்.

இதைத் தொடர்ந்து, பாகன்களிடையே குடியரசுத் தலைவர் பேசியதாவது: ஆஸ்கர் விருது வென்ற ஆவணக் குறும்படத்தை அண்மையில் பார்த்தேன். இதையடுத்து, ஆதரவற்ற யானைக் குட்டிகளைத் தங்கள் குழந்தைகளைப் போல எண்ணி பராமரித்து வரும் பொம்மன் - பெள்ளியைச் சந்தித்தேன்.

தமிழ்நாடு வனத் துறை மூலம் நீங்கள் செய்து வரும் இந்தப் பணிகளுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் கிடைத்திருப்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

**யானைகளைப் பாதுகாப்பது நமது பொறுப்பு:** யானைகளைப் பேணிப் பாதுகாப்பது நமது பொறுப்பாகும். பெட்டகுரும்பர், காட்டு நாயக்கர், மலசார் பழங்குடியின மக்களின் பாரம்பரிய அறிவும் அனுபவமும் இந்த முகாமை நிர்வகிப்பதில் பயன்படுத்தப்படுகிறது என்பது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

இந்தப் பழங்குடியினர் இயற்கையோடு இணைந்து வாழ்கின்றனர். பாகன்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்காக, சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள், நிதி உதவியை அரசு வழங்குகிறது.

இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பழங்குடி சமூகங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தச் சமூகங்களுக்கு அவர்களின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வது மிகவும் முக்கியம். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும்.

அதிநவீன யானைகள் பாதுகாப்பு மையம், சுற்றுச்சூழல் வளாகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியை வழங்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு கல்வி வழங்குவதைவிட சிறப்பானது எதுவுமில்லை என்றார்.

தெப்பக்காடு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், மாலை 5.20 மணியளவில் மீண்டும் மைசூருக்குப் புறப்பட்டார். குடியரசுத் தலைவரின் வருகையையொட்டி மேற்கு மண்டல ஐ.ஜி. சுதாகர் தலைமையில் ஏராளமான காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# எத்தனை யானைக் குட்டிகளானாலும் பராமரிப்போம்

## பொம்மன் – பெள்ளி தம்பதி


யானைகளுடன் பொம்மன், பெள்ளி தம்பதி.

**கூடலூர், ஆக. 5:** எத்தனை யானைக் குட்டிகளானாலும் பராமரிப்போம் என பொம்மன் – பெள்ளி ஆகியோர் தெரிவித்தனர்.

நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் வளர்ப்பு முகாமில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை சனிக்கிழமை சந்தித்து உரையாடிய பொம்மன், பெள்ளி தம்பதி கூறியதாவது:

குடியரசுத் தலைவரை இரண்டாவது முறையாக சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தில்லியில் சந்தித்தபோது அதிக நேரம் உரையாட முடிந்தது. ஆனால், இப்போது அவ்வளவு நேரம் பேச முடியாவிட்டாலும் நிறைவாக உள்ளது. அவரிடம் நாங்கள் எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை. தமிழக அரசு எனக்கு (பெள்ளி) வேலைவாய்ப்பு வழங்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

நாங்கள் ஏற்கெனவே வளர்த்த குட்டி யானைகளைத் தற்போது வேறு இளைஞர்கள் நன்றாகப் பராமரிக்கின்றனர். நான் மற்ற வேலைகளைக் கவனித்துக் கொள்கிறேன். அடுத்து ஏதாவது யானைக் குட்டி வந்தாலும் அதையும் சிறப்பாகப் பராமரிப்பேன். எத்தனை யானைக் குட்டிகள் வந்தாலும் அவற்றைப் பராமரிக்கத் தயாராக இருக்கிறோம் என்றனர்.

**தில்லி செல்லும் பாகன்கள்:** குடியரசுத் தலைவரின் நிகழ்ச்சி முடிந்த பிறகு வனத் துறை அதிகாரிகள் முன்னிலையில் பாகன்களிடம் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹு பேசியதாவது: உங்களைச் சந்தித்ததில் குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். நீங்கள் நன்றாகப் பணியாற்றியதால் குடியரசுத் தலைவரின் அன்பைப் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வர வேண்டும் என்று அழைத்திருக்கிறார். அதனால் பகுதிபகுதியாக தில்லிக்கு செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

**பொதுமக்களைச் சந்தித்த குடியரசுத் தலைவர்:** முன்னதாக, மசினகுடி ஹெலிகாப்டர் இறங்குதளத்தில் இருந்து தெப்பக்காடு செல்லும் வழியில் மசினகுடியில் ஏராளமான பொதுமக்கள் குடியரசுத் தலைவரைக் காண்பதற்காக சாலையில் காத்திருந்தனர். அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுச் சென்ற குடியரசுத் தலைவர், நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் மசினகுடியில் காரை நிறுத்தி இறங்கினார். பின்னர் மக்களுக்கு தமிழில் வணக்கம் கூறிய அவர், பொதுமக்கள், குழந்தைகள் பலருக்கு சாக்லெட்டுகளை வழங்கினார்.

**புத்தகம் எழுதிய சிறுமிக்கு வாழ்த்து:** உதகையைச் சேர்ந்த விஷ்வேஷ் என்பவரின் மகள் அனன்யா (11), மசினகுடியில் உள்ள பறவைகள் என்ற பெயரில் 100 பறவைகளின் புகைப்படங்கள், விவரங்களுடன் தான் எழுதிய பறவைகள் தொடர்பான புத்தகத்தை குடியரசுத் தலைவரிடம் வழங்கினார். அதைப் பெற்றுக் கொண்டு அவருக்கு குடியரசுத் தலைவர் வாழ்த்துத் தெரிவித்தார்.